செ. கு. எண்:295 நாள் :9.11.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 9.11.2013

அரியலூர் மாவட்டம், கீழப்பழூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.சம்பத் அவர்கள் 5.9.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. J.ஜான்சன் அவர்கள் 7.9.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், யானைகவுனி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.பிரேமசந்திரன் அவர்கள் 7.9.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகரம், கரிமேடு போக்குவரத்து காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ஞானசேகரன் அவர்கள் 9.9.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஆயுதப்படை காவல் நிலையத்தில் காவலர்களாகப் பணி புரிந்து வந்த திரு. S.ஐயப்பன் மற்றும் திரு. S.கோபி ஆகிய இருவரும் ஆலங்குளம் வட்டம், கீழப்பாவூர் பகுதி - 1 கிராமம், மஜரா சிவகாமிபுரம், தென்காசி – திருநெல்வேலி பிரதான சாலையில் 10.9.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. குமரன் அவர்கள் 11.9.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், மோட்டார் வாகனப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.ரவிசந்திரன் அவர்கள் 12.9.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சம்பத், பிரேமசந்திரன்; ஞானசேகரன், ரவிசந்திரன்; தலைமைக் காவலர்கள் ஜான்சன், குமரன்; காவலர்கள் ஐயப்பன் மற்றும் கோபி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கீழப்பாவூர் பகுதி - 1 கிராமம், மஜரா சிவகாமிபுரம், தென்காசி – திருநெல்வேலி பிரதான சாலையில் 10.9.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பாளையங்கோட்டை ஆயுதப் படை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. முனீஸ், காவலர்கள் ஜெயசந்திரன், விஜில்குமார், கோபால், ஆல்வின், ராமச்சந்திரன் மற்றும் கிருஷ்ணவேல் ஆகியோர் பலத்த காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சம்பத், ஞானசேகரன், ரவிசந்திரன்; தலைமைக் காவலர் ஜான்சான், உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் பிரேமசந்திரன், தலைமைக் காவலர் குமரன்; சாலை விபத்தில் உயிரிழந்த காவலர்கள் ஐயப்பன் மற்றும் கோபி ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும்; திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் அருகே 10.9.2013 அன்று ஏற்பட்ட சாலைவிபத்தில் பலத்த காயமடைந்த பாளையங்கோட்டை ஆயுதப் படை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. முனீஸ், காவலர்கள் ஜெயசந்திரன், விஜில்குமார், கோபால், ஆல்வின், ராமச்சந்திரன் மற்றும் கிருஷ்ணவேல் ஆகியோருக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**